Vol. 2 No. 1

April- September 2014 ISSN : 2321 - 984X

***Chief Editor***
*Dr. M. Sadik Batcha*

***Advisory Editor***
*Dr. N. Chandra Segaran*

***Editorial Board***
*Dr. D. Murthy*
*Dr. R. Jeya Raman*
*Dr. MAM. Rameez*
*Dr. A. Ra. Sivakumaran*
*Dr. A. Syed Zakir Hasan*
*Dr. A. Pari*
*Dr. S. Easwaran*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. G. Veeramani*
*Dr. T.R. Meena*
*Dr. S. Balasubramanian*
*Dr. K. Vasudevan*
*Dr. P. Elayappillai*
*Dr. T. Vishnu Kumaran*
*Dr. Kumar*
*Dr. Kumara Selva*
*Dr. A. Ekambaram*
*Dr. M. John Jebaraj*

***Associate Editor (s)***
*Dr. K. Sirajudeen*
*Mr. Senthil Prakash*

***Assistant Editor (s)***
*Dr. S. Ramesh*
*Mr. T. Jegathesan*

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் அரையாண்டு ஆய்விதழ்)

## Journal of
# Modern Thamizh Research

*(A bi-Annual International Multilateral Thamizh Journal)*

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

# பண்பாட்டியல் ஆய்வின் அடிப்படைகள்

**சண்முகராஜா சிறிகாந்தன்**
**முனைவர் பட்ட ஆய்வாளர், புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி**
**விரிவுரையாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், இலங்கை**

பண்பாடு என்பது மக்களின் வாழ்வு முறை அனைத்தினுடைய ஒட்டுமொத்தத் தொகுப்பாகும். ஒவ்வொரு மக்களும் தங்களுடைய வாழ்வியலுடன் இணைந்த நிலையில் ஒன்றுக்கு மேற்பட்ட கூறுகளைத் தங்களுடைய பண்பாட்டுக் கூறுகளாகக் கொண்டுள்ளனர். இவை அவர்களுடைய சமூக, பண்பாட்டு அடையாளங்களாகப் பேணப் படுகின்றன. உலகின் ஒவ்வாரு பகுதியில் வாழ்கின்ற சமூகங்கள் அனைத்தும் ஏதோருவகையில் தத்தமது பண்பாட்டு உணர்திறனுடனேயே இணைந்து காணப்படுகின்றன. அதே நேரம் பிற பண்பாடு பற்றி புரிந்து கொள்வதிலும் ஆர்வமுடையனவாக உள்ளன. பல்வேறு துறையின் பண்பாடு பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன. மானிடவியலில் பண்பாடு பற்றிய ஆய்வினை "முழுதளாவிய நிலையில்" நோக்குதலின் அவசியம் வலிறுத்தப்படுகின்றது. இந்நிலையில் இக்கட்டுரை பண்பாட்டியல் ஆய்வின் அடிப்படைகளை விளக்குவதாக அமைகின்றது.

உலகமயப்பட்ட பண்பாட்டுச் சூழமைவில், நாடுகளுக்கிடையிலான அரசியல் எல்லைகள் வலிமையற்று நலிவடைந்து போகின்றன; அதேசமயம் பண்பாட்டுத் தனித்துவங்கள் பல்வேறு சவால்களினைச் சந்தித்து வருகின்றன. இச் சூழமைவில் மானிடவியலாளர்கள் சுதேச பண்பாட்டுக் கூறுகளின் தனித்துவங்களைப் பாதுகாக்க வேண்டிய பொறுப்புடையவர்களாகின்றனர். இதன் ஒரு பகுதியாகவே அண்மைக்காலத்தில் பண்பாட்டியல் ஆய்வுகள் முனைப்பு பெற்றுவருகின்றன. இவை மானிடவியலின் இதயம் போன்றது. இந்நிலையில் இவ்வாய்வானது பண்பாட்டியல் ஆய்வினுடைய சமூக முக்கியத்துவத்தினையும், அதனுடைய முதன்மையான அடிப்படைக் கூறுகளையும் பகுப்பாய்வு செய்வதினை நோக்கமாகக் கொண்டுள்ளது.

பண்பாட்டியல் ஆய்வு (cultural studies) என்பது இரு பொருட் தன்மையுடையது. ஒன்று பண்பாட்டியல் ஆய்வு ஒருவகையான ஆய்வு முறையியல் (as methodology). மனிதப் பண்பாட்டினுடைய விசாலமான கூறுகள் பற்றிய பயனுள்ள அறிவினை உருவாக்குவதற்கான ஒரு வகையான செயல்முறையாக இது விளங்குகின்றது. மறுபுறத்தில் குறித்த பண்பாடு தொடர்பான தரவுகளும் தகவல்களையும் உள்ளடக்கிய ஒன்று (as cultural description). அதாவது பண்பாடு விவரிப்பு எனலாம். இருந்த போதிலும் ஸ்ரொவாட்ர் (Stuart Hull 1990) என்னும் அறிஞர் "பண்பாட்டியல் ஆய்வு என்பது குறிப்பிட்ட ஒரு விடயம் சார்ந்த ஆய்வல்ல" என்கிறார். ஏனெனில் உலகில் உள்ள பல்வகைத் தன்மையுடைய மரபுகளையும் மக்களின் வாழ்வியல் கூறுகளையும் ஒரு பொதுவான வரைபடத்தினுள் வரைவதற்கு பண்பாட்டியல் ஆய்வு உதவுகின்றது; அதேவேளை இது ஒரு துறைசார்ந்த ஆய்வல்ல மாறாக துறைகளுக்கிடையிலான (inter-discipline), துறைகளுக்குள்ளேயான (intra-discipline) குறித்த துறைகடந்த (trans-discipline) ஆய்வு அணுகுமுறையாகும்.

பண்பாட்டியல் ஆய்வு தொடர்பாக பொதுவாகக் குறிப்பிடும் போது குறித்த சமூகத்தினுடைய கலை, நம்பிக்கை, வழக்காறு, நிறுவனக்கட்டமைப்பு, சிந்தனைமுறை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒட்டு மொத்த சமூக வாழ்வியல் கூறுகளை அச் சமூகத்தின் சமூக, வரலாற்றுக் கட்டமைப்பினுள் நின்று ஆய்வு செய்கின்ற ஓர் அணுகுமுறையெனலாம்.

மார்க்சிய சிந்தனையாளர்கள் பண்பாட்டியல் ஆய்வுகளின் இரண்டு அடிப்படை வழிமுறைகளை இனங்காட்டுகிறார்கள். முதலாவது, ஆய்வாளர் குறித்த சமூகக் கட்டமைப்பு, அவற்றினுடைய வரலாற்றியல் தொடர்ச்சி ஆகியவற்றுடன் தொடர்புபட்ட நிலையில் பண்பாடு என்ற எண்ணக்கருவிற்கான அர்த்ததினை புரிந்துகொள்ளல். இங்கு பண்பாடு என்பது குறித்த சமூகத்தினுடைய வரலாற்றுடனும் அதன் கட்டமைப்புடனும்; ஒன்றிணைந்த ஒன்றாகக் கருதப்படுகிறது. எனினும் அது குறிப்பிட்ட சமூகத்தினுடைய கட்டமைப்பு, வரலாறு ஆகியவற்றின் பிரதிபலிப்பாக நோக்கப்படவில்லை. எனவே குறிப்பிட்ட சமூகக் கட்டமைப்பின் ஒன்றிணைவுக்கும், அதனுடைய சமூக வரலாற்றின் உருவாக்கத்திற்கும் காரணமான முக்கிய காரணிகளிலிருந்தே பண்பாட்டின் தனித்துவங்கள் தோன்றுகின்றன என்பதனையே மையப்படுத்தி பண்பாட்டியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றன. இரண்டாவது, தொழில்முறை சமூகமானது இனத்துவம், பால்நிலை, வகுப்பு வர்க்கம் போன்ற சமமற்ற வகையில் பிரிக்கப்பட்டுள்ளது. இங்கு பண்பாடு என்பது சமமற்ற பண்புக் கூறுகளையுடைய ஒன்றாகவே காணப்படுகின்றது. எனவே இச் சமூகத்தில் பண்பாட்டியல் ஆய்வுகள் பண்பாட்டின் சமமற்ற கூறுகளை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றன.

பண்பாட்டியல் ஆய்வுகள் பிரித்தானியப் பல்கலைக்கழகத்தில் 1963களில் முறையாக அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்குரிய துறைசார் பிரிவானது பெர்மின்ங்காம் என்னும் நகரத்தில் 'சமகாலப் பண்பாட்டியல் ஆய்வு மையம்' (Centre for Contemporary Cultural Studies - CCCS) என்னும் பெயருடன் ரிட்ச்சாட் ஹொகார்ட் என்பவருடைய பொறுப்பின் கீழ் உருவாக்கப்பட்டது. 1970களில் இம் மையம் மார்க்சிய சிந்தனையாளர்களின் அடிப்படையில் விரிவுகண்டது. மேலும் இக்காலப்பகுதியில் வழக்கமான, பிரபல்யமான, எங்கும் வியாபித்துள்ள பண்பாட்டு விடயங்களை ஆவணப்படுத்தும் ஒரு பணிமுறையாகவே பண்பாட்டியல் ஆய்வுகள் நோக்கப்பட்டன. ஆனால் 1980களில் பின்-அமைப்பியம், உளவியல் பகுப்பாய்வு ஆகிய கோட்பாடுகளின் செல்வாக்குகள் பண்பாட்டியல் ஆய்வில் முதன்மை பெற்றன. இந்நிலையில் 1980களின் நடுப்பகுதியில் பெர்கிங்காமில் உள்ள சமகாலப் பண்பாட்டியல் ஆய்வு மையம் (CCCS) பால்நிலை, இனத்துவம், வகுப்புவாதம் ஆகியவற்றுடன் தொடர்புபட்ட வகையில் பட்டப்படிப்பின் மேற்படிப்பு சார்ந்த பண்பாட்டியல் ஆய்வுகளுக்கு ஆதரவினை வழங்கியது. இக்காலப்பகுதியில் பண்பாட்டியல் ஆய்வுகள் பரந்த நிலை ஆய்வு அணுகுமுறையிலிருந்து நுண்நிலை ஆய்வு அணுகுமுறை நோக்கியதாக (macro to micro approaches) அமைந்துள்ளது.

1990களின் ஆரம்பத்தில் தேசங்களுக்கிடையிலான ஒருங்கிணைந்த நிகழ்ச்சிதிட்டம், ஆய்விதழ்கள் ஆகிய பிரதான ஊடகங்களின் மூலம் பிற நாடுகளுக்கும் பண்பாட்டியல் ஆய்வுகள் பரவலடைந்தன.

மானிடவியலின் முதன்மையான பிரிவுகளில் ஒன்று பண்பாட்டு மானிடவியல். இது உலகின் பல்வேறுபட்ட சமகாலச்

சமூகங்கள், அவற்றினுடைய பண்பாடு தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றது. உலகில் தனித்துவிடப்பட்ட எளிமையான சமூகம் (isolated primitive society) தொடக்கம் மிகவும் பிரபல்யமான சிக்கல் தன்மை கொண்ட சமூகம் (popular complex society) வரையாக இதன் ஆய்வுப் பரப்பு விசாலமடைந்துள்ளது. அதிகமான மானிடவியலாளர்கள் தொடக்க காலத்திலிருந்தே தொன்மை மக்களின் பண்பாடு தொடர்பான ஆய்வுகளில் ஈடுபட்டுவருகின்றார்கள். எனினும் அண்மைக் காலத்திலிருந்து தத்தமது சொந்தப் பண்பாடு தொடர்பான ஆய்வுகளில் தங்களுடைய கவனத்தைச் செலுத்திவருகின்றனர்.

பண்பாட்டியல் ஆய்வானது சமயம், சமூகம், கலை, பொருளாதாரம், நம்பிக்கைகள், வழக்காறு என்று பல்வேறு பொருண்மைகளை உள்ளடக்கியது. இவ்வகையான ஆய்வுகளில் தொடக்காலத்தில் பிரேசர், போவாஸ், மலினோவஸ்கி, ரட்கிளிப்பிறவுண், மாக்கிரேட் மீடு, ருத் பெனடிக் போன்ற மேலைநாட்டு ஆய்வாளர்கள் பலர் உலகின் பல்வேறு நாடுகளில் வாழும் சுதேச மக்களின் பண்பாட்டியல் கூறுகள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர். இந்தியப் பண்பாட்டு பெருநிலப்பரப்பில் இந்தியப் பண்பாட்டுப் பல்வகைமைத்துவத்துவத்தினையும் தனித்துவத்தினையும் வெளிக்கொண்டு வரும் வகையில் பல்வேறு பண்பாட்டியல் ஆய்வுகள் இடம் பெற்றுள்ளன. இந்நிலையில் எம்.என்.சிறிவாஸ், அபே துபே, தூய்மோன், மரியட் ரெட்பீல்ட் போன்றவர்கள் உட்பட பல்வேறு மானிடவியலர்கள் மேற்கொண்டுள்ளனர். இவர்கள் அனைவரும் நீண்ட காலக் களப்பணியின் வழியே பெறப்பட்ட தரவுகளையும் தகவல்களையும் அடிப்படையாகக் கொண்டே தங்களுடைய பண்பாட்டியல் ஆய்வுகளை எமதாக்கியுள்ளனர்.

பண்பாட்டியல் ஆய்வுகள் பன்முகத் தன்மை கொண்டவை. அவற்றுக்கான தகவல் மூலங்களும் பல்வகைமைத்துவம் கொண்டன. பண்பாட்டியல் ஆய்வுகளில் பல்வேறு அடிப்படைக் கூறுகள் முதன்மையானவை. இவை பண்பாட்டியல் ஆய்வினுடைய நம்பகத்தன்மை (reality), ஏற்றுக் கொள்ளும் தன்மை (validity) ஆகியவற்றிக்கு அடிப்படையாக அமைகின்றன. இந்நிலையில் கட்டுரையின் பிரதான நோக்கம் பண்பாட்டியல் ஆய்வுகளில் அடிப்படைக் கூறுகளின்; அவசியத்தினைப் பரிசீலிப்பதாகும்.

**1. பண்பாட்டுப் புவியியல் (Cultural geography)**

பண்பாட்டுப் புவியியல் என்பது புவிமேற்பரப்பில் வாழும் மனித சமூகத்தின் பல்வகைத் தன்மையினைப் புரிந்து கொள்ளுதல்; பண்பாட்டு வேறுபாடுகளுக்கும் இடம்சார்ந்த வேறுபாடுகளுக்கும் இடையிலான தொடர்பினை ஆராய்ந்தறிதல்; ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒன்றாகும். மானிடவியலாளர்கள் இயற்கைசார்ந்த கூறுகளிலிருந்து பண்பாட்டுக் கூறுகளின் வேறுபாடுகளை இனங்காட்டுகின்றன. பண்பாட்டுப் புவியியல் என்பது இயற்கையினை மையமாக் கொண்டு குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினர் உருவாக்கிய ஒரு பண்பாட்டியல் அலகு. பண்பாடு என்பது, மக்கள் தங்களுக்கான சுற்றுச்சூழலில், வாழிடத்தில் நன்கு தகவமைந்து வாழ்வதற்காக ஏற்படுத்தப்பட்ட வழிமுறை; அல்லது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான இடைவினையின் வழிப்பட்டது என வரையறை செய்யலாம். இவ்வாறான பண்பாட்டுக்கான வரையறைகளின் அடிப்படையிலேயே உலகின் பண்பாட்டு வேறுபாடுகள் இயற்கை வேறுபாடுகளின் வழியே ஆராயப்பட வேண்டியது என்றக் கருத்தினை பண்பாட்டுப் புவியியல் வலியுறுத்துகின்றது. இந்நிலையில் பண்பாட்டியல் ஆய்வாளர்

குறிப்பிட்ட பண்பாட்டினுடைய பௌதிகக் கூறுகளையும் அதனுடன் தொடர்புடைய புவியியல் அம்சங்களையும் கவனத்தில் கொள்ளுதல் அவசியமானதாகும்.

## 2. இன வரலாற்றியல் (Ethnohistory)

இனவரலாற்றியல் அணுகுமுறை என்பது குறிப்பிட்ட சமூகக் குழுவினுடைய வரலாற்றை மானிடவியல் நோக்கிலிருந்து ஆய்வு செய்வதாகும். பண்டைக்காலப் பயணக் குறிப்புக்கள் தொடங்கி ஆவணப்படுத்தப்பட்ட வரலாற்றியல் மூலங்கள், குறிப்பிட்ட சமூகத்தில் நிலவும் வாய்மொழி வழக்காறுகள் என்று பல்வேறு மக்கள் வரலாற்றைப் பதிவு செய்துள்ளவற்றின் அடிப்படையில் குறித்த சமூகத்தின் வரலாற்றை மீளக்கட்டியெழுப்புகின்ற ஓர் ஆய்வு முறையேயாகும். இன்னொருவகையில்; கூறினால், இவை அம் மக்களுடைய 'பண்பாட்டு வரலாறு' (cultural history) எனலாம். குறித்த சமூகத்தினுடைய தொன்மம், பழங்கதை, இடப்பெயர்வுக் கதை, வழக்காறு, நியமம், சமயம், சடங்கு, நம்பிக்கை, கலை. மனப்பாங்கு போன்ற பண்பாட்டியல் கூறுகளைப் பகுப்பாய்வு செய்வதற்கு இவ்வணுகுமுறை பெரிதும் உதவுகின்றது. ரட்கிளிஃப் பிரவுண் மற்றும் அவருடைய வழிவந்தோர் பண்பாடு தொடர்பான அமைப்பு-தொழிற்பாட்டியல் (structural-functionalism) ஆய்வில் வரலாற்றியல் நோக்கிலான புரிந்துகொள்ளுதலுக்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## 3. இனவரைவியல் (Ethnography)

பண்பாட்டியல் ஆய்வில் குறித்த சமூகத்தின் பண்பாடு பற்றி விவரித்தலே முதன்மையானதாகும். இதற்கு இனவரைவியல் சார்ந்த அணுகுமுறை இன்றியமையாதது. இனவரைவியல் என்பது குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினரினை அவர்கள் வாழும் சுற்றுப்புறச் சூழமைவில் வைத்து ஆராய்ந்தறிந்து கொள்ளும் ஒரு மானிடவியல் ஆய்வு அணுகுமுறையாகும். 'பண்பாடு என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான இடைவினையின் வெளிப்பாடு' என்னும் பண்பாடு பற்றிய வரையறையானது பண்பாட்டியல் ஆய்வில் இனவரைவியல் நோக்கிலான புரிந்துகொள்ளுதலின் அவசியத்தினைக் காட்டுகின்றது. இனவரைவியல் ஆய்வு முறையியலானது ஆய்வாளருக்கும் ஆய்வுச் சமூகத்திற்கும் இடையிலான நெருக்கமான தொடர்பினை வலியுறுத்துகின்றது. இதன் வழியேதான் குறித்தப் பண்பாடு பற்றிய முழுமையான புரிந்து கொள்ளுதலை ஒரு பண்பாட்டியல் ஆய்வாளர் சமூகத்துக்குக் கொடுக்க முடியும்.

## 4. அகவய புறவய அணுகுமுறை (Emic and Etic approaches)

பண்பாட்டியல் ஆய்வில் அகவய, புறவய என்ற இரண்டு பிரதான அணுகுமுறைகளும் முதன்மையானவை. அகவய அணுகுமுறை என்பது 'உள்ளார்ந்த நோக்கு' (insider view) ஆகும். ஒவ்வொரு பண்பாட்டைச் சார்ந்தோரும் தங்களுடைய பண்பாட்டியல் கூறுகளைப் புரிந்துகொள்வதற்குத் தனித்தனியான அர்த்தங்களை வழங்குகின்றார்கள். இந்நிலையில் ஒரு பண்பாட்டியல் ஆய்வாளர் குறித்தப் பண்பாட்டு மக்களுடைய நோக்கிலிருந்து அம்மக்களுடைய பண்பாட்டை விளங்கிக் கொள்ளுதல் அகவய அணுகுமுறையாகும். மாறாகப் புறவய அணுகுமுறை என்பது 'புறநிலை நோக்கு' (outer view) ஆகும். ஆய்வாளர் குறித்த பண்பாட்டினைச் சேராத பிறிதொருவரின நோக்குநிலையில் தான் ஆய்வு செய்ய எடுத்துக் கொண்ட பண்பாட்டின் கூறுகளைப் புரிந்து கொள்ளுதல். இங்கு ஆய்வாளர் தன்னுடைய கல்விப்புலம் சார்ந்த நிலையில் குறித்த மக்களுடைய பண்பாட்டினை விளங்கிக்

கொள்ளுதல் முக்கியமாகும். பண்பாடு பற்றிய விவரித்தலின் போது இவ்விரண்டு அணுகுமுறைகளும் அவசியமானது. அகவய அணுகுமுறைகளின் வழியே பெறப்பட்டத் தகவல்களை மானிடவியல் நோக்கில் பகுப்பாய்வு செய்கின்ற போது புறவய நோக்கிலான புரிந்துகொள்ளுதல் இன்றியமையாதது. இவ்விரண்டு அணுகுமுறைகளும் பண்பாட்டியல் ஆய்வில் முதன்மையானவை ஆகும்.

## 5. பண்பாட்டுச் சார்புடைமை (Cultural relativism)

பண்பாட்டியல் ஆய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளருக்கு இருக்க வேண்டிய விழிப்புணர்வுகளில் இதுவும் ஒன்று. மானிடவியலாளர்களினால் பண்பாடு தொடர்பான ஆய்வுகளின் போதும், பண்பாட்டிடை ஆய்வுகளின் போதும் எவ்வித வழுக்களும் இன்றி குறித்தப் பண்பாடு தொடர்பான விவரித்தலினை மேற்கொள்ள பயன்படுத்தப்படும் ஒரு கோட்பாட்டியல் சார்ந்த அணுகுமுறை, கருவி பண்பாட்டுச் சார்புடைமையாகும். உலகப் பண்பாடுகளிடையே நியதிசார்ந்த நிலையில் குறித்த பண்பாட்டியல் கூறுகள் தான் சரியானது என்றோ அல்லது தவறானது என்றோ கூறுவதற்கே இடமில்லை என்ற கருத்தின் அடிப்படையில் தோற்றம் பெற்ற மானிடவியல் சிந்தனையே பண்பாட்டுச் சார்புடைமை என்னும் கொள்கையாகும். இது பண்பாட்டியல் ஆய்வாளருக்குத் தகுந்த விழிப்புணர்வினை வழங்குகின்றது. பல்லினச்-சமூகங்களுக்கு (multiethnic-societies) இடையே பண்பாட்டுத் தனித்துவங்கள், சிறப்பியல்புகள் மற்றும் பண்பாட்டியல் கூறுகள் பற்றிய பகுப்பாய்வுகளில் பண்பாட்டுச் சார்புடைமை பற்றிய அறிவு முதன்மை பெறுகின்றது. மாறாக குறித்தப் பண்பாட்டுக் கூறுகள்தான் மிகச் சிறந்தவை எனும் பக்கச் சார்பான முடிவுகளுக்கு வருவதினையும் இது தடுக்கின்றது. இதனால் பண்பாட்டியல் ஆய்வுகளில் முக்கியமான இடத்தினைப் பண்பாட்டுச் சார்புடைமைக் கொள்கை பெறுகின்றது.

## 6. இனமையவாதம் (Ethnocentrism)

பொதுவாகவே மக்கள் தாம்சார்ந்த பண்பாட்டிலிருந்தே பிற சமூகத்தினரது பண்பாட்டினை நோக்கும் இயல்பு உடையவர்களாக உள்ளனர். சில சமயங்களில் இது மக்கள் தமது பண்பாடு ஏனைய பண்பாட்டினை விட 'உயர்ந்தது' அல்லது 'சிறந்தது' என்றும் பிறருடைய பண்பாடு தமது பண்பாட்டினை விடத் 'தாழ்ந்தது' அல்லது 'இழிவானது' என்றும் தத்தமது பண்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு மதிப்பிடுவதற்கு அடிப்படையாகிவிடுகின்றது. இவ்வாறாக மக்கள் தமது சொந்தப் பண்பாட்டிலிருந்து பிற பண்பாட்டுக் கூறுகளை மதிப்பிடுதலையே இனமையவாதம் என்பர். இவை மக்களிடையே முற்சாய்வு, பாரபட்சம், காழ்ப்புணர்வு ஆகிய முரண்பாட்டியல் பண்புக்கூறுகளுக்கு வழி வகுத்து விடுகின்றன. சமகால உலகப் பண்பாடுகளுக்கு இடையிலான முரண்பாடுகளுக்கு இதுவும் ஒரு காரணி. இந்நிலையில் பண்பாட்டியல் ஆய்வாளர் தன்னுடைய சொந்தப் பண்பாட்டிலிருந்து பிறிதொரு பண்பாட்டினை ஆய்வு செய்யும் போது இனமையவாத சிந்தனையிலிருந்து விடுபட்டிருத்தல் இன்றியமையாதது.

## 7. பண்பாட்டு அதிர்ச்சி (Cultural shock)

பண்பாட்டியல் ஆய்வுகளில் ஆய்வாளர் தமக்கு அறிமுகமில்லாத பண்பாட்டினை ஆய்வு செய்யும் போது எதிர்கொள்ளும் அசௌகரியம், நிச்சயமற்ற உளப்பாங்கு ஆகியனவே பண்பாட்டு அதிர்ச்சி ஆகும். ஆய்வாளருக்கு இயற்கைச் சுற்றுச் சூழல், காலநிலை தொடங்கி

வாழ்வியல்முறை வரையாக உள்ள அனைத்தும் புதியனவாக அமையும் போது அவருக்கு ஏற்படும் தேவையற்ற பதற்றம், கவலை உணர்வு, சலிப்புத் தன்மை, அச்சம், கோபம் போன்ற அனைத்து உளவியல் நிலைமைகளும் பண்பாட்டு அதிர்ச்சின் விளைவுகளாகும். அதிகமான மானிடவியலாளர்கள் குறிப்பிட்ட அளவிலான பண்பாட்டு அதிர்ச்சி பண்பாட்டியல் ஆய்வினை சிறப்பாகச் செய்வதற்கு அவசியம் என்கின்றார்கள். மாறாக இவை மிக அதிகமாக இருப்பது பண்பாட்டியல் ஆய்வில் மிகப்பெரிய தடையினை உருவாக்கும் என்ற கருத்தும் உள்ளது. இந்நிலையில் பண்பாட்டியல் ஆய்வுகளில் பண்பாட்டு அதிர்ச்சி தொடர்பான முன் அறிவும்; அவசியமானது.

அண்மைக் காலத்தில் நாட்டார் வழக்காற்றியில், இலக்கியவியல், உளவியல், சமூகவியல், மருத்துவியல் போன்ற இன்னோரன்ன பிறதுறையின் தத்தமது துறைசார்ந்த நிலையில் சமூக சிக்கலகளுக்குத் தீர்வு காண்பதற்கும், சமூக மேம்பாட்டுக்கான திட்டங்களை வகுப்பதற்கும் சமூகங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலையில் பண்பாட்டியல் ஆய்வு அடிப்படைகள் தொடர்பான பொதுவான அறிமுகம் இங்கு அவசியமானது. ஒவ்வொரு ஆய்வாளரும் தன்னுடைய சமூகம் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் முன் பண்பாட்டியல் ஆய்வு அடிப்படைகள் தொடர்பான விழிப்புணர்வுடன் இருத்தல் அவசியமாகும். இது ஆய்வாளரையும், அவர் மேற்கொள்ளும் ஆய்வினையும் செம்மைப்படுத்துவதற்குப் பெரிதும் துணை செய்யும். இக்கட்டுரையில் பண்பாட்டு ஆய்வின் அடிப்படைகள் மிகச் சுருக்கமாகவே தரப்பட்டுள்ளது. எனினும் இது பண்பாட்டு ஆய்வுகளை மேற்கொள்வோருக்கு அறிமுகத்தினை வழங்குகின்றது.

## துணைநூற்பட்டியல்

பக்தவத்சல பாரதி. **2011.** பண்பாட்டு மானிடவியல;. புத்தாநத்தம்: அடையாளம்

Adam, Kuper and Jessica, Kuper (eds.). 1996. *The Social Science Encyclopedia*. London-New York: Routledge

Barnard, A & Spencer, J (eds.). 1996. *Encyclopedia of Social and Cultural Anthropology*. London-New York: Routledge.

Birx, James H (ed.). 2006. *Encyclopedia of Anthropology*. New Delhi: Sage Publication

Levinson, D. & Ember, M (eds.). 1996. *Encyclopedia of Cultural Anthropology*. New York: A Henry Holt and Company. Inc.

ஒ